பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 28 (14—10—72) சனி | வெளியூர்: புரட்டாசி 29 (15—10—72) ஞாயிறு [இதழ்: 101

வறட்சி—9,200 கிராமங்களில் ஒரு கோடி மக்கள் தவிப்பு

ஆமதாபாத், அக். 14—

குசராத்தில் மிகக் கடுமையான வறட்சி நிலவுகிறது; அண்மை ஆண்டுகளில் இவ்வளவு கடுமையான நிலைமை இருந்ததில்லையாம்.

9,200 கிராமங்களில் உள்ள 1 கோடிக்கு மேற்பட்ட மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குடிநீர் சப்ளை பெரும் பிரச்சினையாக இருக்கிறது; பெரும்பாலான கிராமங்களுக்கு மட்டும் வண்டிகளில் தண்ணீர் அனுப்ப வேண்டியிருக்கிறது.

'கழகத்தை அலட்சியமாக மதிக்கிறார் எம். ஜி. ஆர்.

[*]

'அவரது செயல்களே இதனை மெய்ப்பிக்கின்றன'

'நல்லெண்ண அடிப்படையில் அளிக்கப்பட்ட வாய்ப்புக்களையும் அவர் பயன்படுத்திக்கொள்ளாதது வருந்தத்தக்கது'

பொதுச்செயலாளர் நடவடிக்கைக்கு ஒப்புதல்—தி. மு. க. தலைமைச் செயற்குழு தீர்மானத்தின் விவரம்

சென்னை, அக். 14

"திரு. எம். ஜி. ஆர். விடுக்கின்ற அறிக்கைகளும் – நிருபர்களுக்குத் தருகின்ற பேட்டிகளும், 'எம். ஜி. ஆர். ரசிகர்கள்' என்ற பெயரால் சில விஷமிகள் தூண்டிவிடப்பட்டுக கழகத் தலைவர்களின் படங்கள் உடைக்கப்படுவதும் – கழகக் கொடிகள் தீயிடப்படுவதும் – கழகத்தைப் பற்றி ஆபாசமாக எழுதுவதும் – கழகத் தலைமை நிலையமான 'அறிவகம்' தாக்கப்பட்டது போன்ற செயல்களும் – செயற்குழு உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் நாடு முழுவதிலும் உள்ள தோழர்கள் தாங்கிக் கொள்ளக்கூடியதாக இல்லை.

'கழகத்தின் நலனுக்காக எம். ஜி. ஆர். அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கழகப் பணியில் ஈடுபட வாய்ப்பு ஒன்றினை நல்லெண்ண அடிப்படையில் அளித்தும்கூட அவர் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாதது வருந்தத்தக்கதாகும்.

"ஆகவே, அவர் கழகத்தின் ஒழுங்கு முறைகள் குலையும் வகையில் நடந்துகொண்டதற்காக அவர்மீது கழகச் சட்ட திட்ட விதி 31-ன்படி பொதுச்செயலாளர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை இந்தச் செயற்குழு ஒருமனதாக ஏற்றுக்கொண்டு – இந்தத் தீர்மானத்தைப் பொதுக்குழுவுக்குப் பரிந்துரை செய்கிறது"

என்று, சென்னையில் அக். 12, 13-ம் நாட்களில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், எம். ஜி. ஆர். பிரச்சினை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கூறுகிறது; தீர்மானத்தின் முழு விவரம் வருமாறு:—

"கழகத்தின் பொருளாளர் புரட்சி நடிகர் திரு. எம்.ஜி.ஆர். அண்மைக்காலமாக பல பொதுக்கூட்டங்களில் பேசிய கருத்துக்கள், கழகத்தை வேண்டுமென்றே எதிர்க் கட்சிக்காரர்கள் பாணியில் குறறஞ்சாட்டுவதாக அமைந்திருக்கிறது.

எதுவாயினும் நேரிலே பேசிக்கொள்வது முறை என்றும் – பொதுக்கூட்டங்களில் வெளிப்படையாகப் பேசுவது கழகக் கட்டுப்பாட்டை குலைப்பது ஆகும் என்றும் கழகத் தலைவர் அவர்கள், திரு. எம். ஜி. ஆர். அவர்களிடம் பலமுறை சொல்லி இருந்தும் கூட அவர் அதனையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து கழகத்தின் கட்டுப்பாட்டை மீறிப் பேசியும் – செயல்பட்டும் வந்திருக்கிறார்.

அந்தச் செயல்களின் உச்சக்கட்டமாகக் கடந்த 8—10—72 அன்று சென்னையில் ஒரு கூட்டத்தில் அவர் பேசியபோது, 'கழக அரசு தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை' என்ற கருத்தினைக் கூறியிருக்கிறார்.

சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் – குடிசைவாழ் மக்கள் – நடுத்தர மக்கள் அனைவருக்கும் கழக அரசு, பிச்சைக்காரர் மறுவாழ்வு – குடிசை மாற்று வாரியம் – கண் ஒளி வழங்கும் திட்டம் – வீட்டுமனை, நிலப் பட்டாக்களை வழங்கும் திட்டம் போன்ற நூற்றுக்கணக்கான திட்டங்களை நிறைவேற்றியிருப்பதை அண்மைக் காலத்தில் நடைபெற்ற கழக மாநாடுகளில் விளக்கிப் பேசிய எம். ஜி. ஆர். அவர்கள், அதற்கு மாறாகத் திடீர் என்று சில நாட்களாகக் கழக அரசைக் குறை கூறுவது, திட்டமிட்டுச் செய்கின்ற பிரசாரமாகவே தோன்றுகிறது.

ஏற்கனவே அமைச்சர்களும் – சட்டமன்ற உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் தங்கள் சொத்துக் கணக்கையும் – தங்கள் குடும்பத்தினர் சொத்துக் கணக்கையும் வைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றி – அவ்வாறு சட்டமன்றத்தில் சொத்துக் கணக்குகளும் வைக்கப்பட்டு வருகின்றன.

தலைமைக் கழகத்தின் வரவு – செலவுகளும், தணிக்கையாளர்களாலும் மற்றும் கழகத்தின் தணிக்கைக் குழுவினராலும் பரிசீலிக்கப்பட்டுச் செயற்குழு – பொதுக்குழுக்களில் வைக்கப்பட்டு வருகின்றன.

பொறுப்பான பதவிகளில் இருக்கின்ற கழகத்தினர் ஓரிருவர் தங்கள் பதவியைப் பயன்படுத்திக்கொண்டு கண்ணியம் தவறி நடந்து கொண்டபோது, அவர்களை நண்பர்கள் என்றோ – கழகத்தினர் என்றோ பாராமல், கழக அரசு அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துள்ளது; அத்தகையோர், பொதுச்செயலாளர் அவர்களால் கழகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர்; இதனை நாட்டு மக்கள் நன்கு அறிவர்; திரு. எம். ஜி. ஆர். அவர்களும் இதனை அறியாதவரல்லர்; அப்படி இருந்தும், சென்னையில் 8-ந் தேதி அவர் பேசிய கூட்டத்தில், 'கிளைக் கழகச் செயலாளர்களும் – வட்டக் கழகச் செயலாளர்களும் – மாவட்டச் செயலாளர்கள் அனைவரும் தங்களது சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டுமென்று தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப் போகிறேன்' என்றும், 'அந்தத் தீர்மானத்தை 30-க்கு மேற்பட்ட கழக முன்னணியினர் இடம் பெற்றுள்ள செயற்குழுவும், 300-க்கு மேற்பட்ட வட்டச் செயலாளர்கள் – மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட பொதுக்குழுவும் நிறைவேற்றாமல் நிராகரித்துவிட்டால் பொதுமக்களைச் சந்திப்பேன்' என்றும், 'தி. மு. கழகத்தினரை மக்கள் முன்னால் நிறுத்துவேன்' என்றும் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் எச்சரித்துப் பேசி – அந்தப் பேச்சு அவருக்கும் பிரியமான ஏடுகளில்கூட வெளிவந்திருக்கிறது.

இந்தப் பேச்சுக்கும் – எதிர்க் கட்சி மேடைகளில் கழகத்தைப் பற்றித் தாக்கிப் பேசுகின்றவர்கள் பேச்சுக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதை எண்ணி இலட்சக்கணக்கான கழகத் தோழர்கள் மனம் புண்பட்டுள்ளனர்.

இதுபோல் கழகத்தைப் பற்றிக் கட்டுப்பாடற்ற வகையில் அவர் தொடர்ந்து பேசி வருவதையும் – செயல்படுவதையும் சுட்டிக்காட்டி, கழகத்தின் ஒழுங்கு முறை குலையும் வகையில் அவர் நடந்துகொள்வதைக் குறிப்பிட்டு செயற்குழு உறுப்பினர்கள் 25-க்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்ட விண்ணப்பத்தைத் தலைவரிடத்திலும், பொதுச்செயலாளரிடத்திலும் அளித்தார்கள்; நிலையைப் பரிசீலித்துக் கழகத் தலைவரைக் கலந்துகொண்டு கழகப் பொதுச்செயலாளர் அவர்கள், திரு. எம்.ஜி.ஆர். அவர்களைத் தற்காலிகமாக விலக்கிவைத்து – அவரிடம் விளக்க சமாதானம் கேட்டிருக்கிறார்.

இதற்கிடையே அவர்மீது மேல் நடவடிக்கை எடுப்பதைச் சற்று ஒத்திவைக்கவேண்டும் என்றும், எம்.ஜி.ஆர். அவர்கள் தமது செயல்களுக்குக் கட்சி நலனை முன்னிட்டு வருத்தம் தெரிவித்துக் கொள்வாரேயானால் தொடர்ந்து அவர்மீது நடவடிக்கை எடுப்பதை விட்டு விடலாம் என்றும் தலைவரும் – பொதுச் செயலாளரும் எடுத்துக் கூறியதை இந்தச் செயற்குழு ஏற்றுக்கொண்டு, திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒருநாள் அவகாசம் தரப்பட்டது; இந்தச் சமரச முயற்சியில் திரு. மனோகரன் எம்.பி. அவர்கள் ஈடுபட்டார்; ஆனால் உடனடியாக எம்.ஜி.ஆர். அவர்கள், செயற்குழு தந்த வாய்ப்பினைப் புறக்கணித்துவிட்டு அறிக்கை வெளியிட்டார்; அதன் பிறகும் செயற்குழு பொறுமையைத்தான் கடைபிடித்தது.

இதற்கிடையே தந்தை பெரியார் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களை அழைத்துப் பேசி, 'தனி மனிதர்தான் கட்சிக்குக் கட்டுப்பட வேண்டும்; தனி மனிதருக்குக் கட்சி கட்டுப்படாது' என்ற கருத்துப்பட விளக்கங்களை அளித்ததோடு, 'வருத்தம் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

பெரியாருக்குச் செப்புப் பட்டயம்

முதல்வர் கலைஞர் நேரில் சென்று வழங்கினர்

சென்னை, அக். 14—

முதல்வர் கலைஞர் அவர்கள் நேற்று காலை தந்தை பெரியாரைச் சந்தித்து, விடுதலை வீரர்களுக்கான செப்புப் பட்டயத்தை வழங்கினார்.

முதல்வர் கலைஞர் – அமைச்சர்கள் நாவலர், மன்னை நாராயணசாமி, க. இராசாராம் ஆகியோர் பெரியார் திடலில் உள்ள 'விடுதலை'ப் பத்திரிகை அலுவலகத்தில் தந்தை பெரியாரைச் சந்தித்தனர்.

தந்தைக்குக் கலைஞர் மாலையணிவித்து – மழங்கள் வழங்கிய தட்டில் பட்டயத்தை வைத்து அளித்தார்.

பட்டயத்தைப் பெற்றுக்கொண்ட பெரியார் 'ரொம்ப மகிழ்ச்சி' என்று கூறினார்.

எம். ஜி. ஆர். கூற்றுக்கு மறுப்பு

அமைச்சர் சத்தியவாணிமுத்து அறிவிப்பு

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:—

"தி. மு. கழகத்தின் முக்கியப் பொறுப்பிலிருந்த திரு. எம். ஜி. ஆர். அவர்கள், கட்சியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறார்.

எம். ஜி. ஆர். அவர்கள் கழகத்தைப் பற்றிப் பொது மேடையில் பேசிய கருத்துக்கள் தவறானவை என்று வருத்தம் தெரிவித்தால் சமரசம் காணலாம்; ஆகவே, மேல் நடவடிக்கையை நிறுத்தி வைக்கலாமென்று செயற்குழுவில் எடுத்துச் சொல்லப்பட்டது; கழகத் தலைவர் கலைஞர் அவர்களும் – பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும் – செயற்குழுவினரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டனர்.

ஆகவே, அந்த அடிப்படையிலும் – குடும்ப நண்பர் என்ற முறையிலும் சமரச முயற்சிக்காகத்தான திரு. எம். ஜி. ஆர். அவர்களைச் சந்திக்கச் சென்றிருந்தேன்.

இந்த நிலையில், என்னைப் பற்றித் தவறான செய்தி வந்திருக்கிறது; என்னை மிரட்டியதால் கையெழுத்துப் போட்டேன் என்றோ, அப்படிக் கையெழுத்துப் போட்டது தவறு என்றோ நான் சொல்லவில்லை.

திரு. எம். ஜி. ஆர். அவர்களும் நான் அப்படிச் சொன்னதாகப் பத்திரிகைக்காரர்களிடம் சொல்லியிருக்கமாட்டார் என்று நம்புகிறேன்."

அறிவிப்பு

16—10—72 அன்று நமது அலுவலகத்துக்கு விடுமுறையாகையால் 'நம்நாடு' அடுத்த இதழ் 17—10—72 அன்று சென்னையிலும், மறுநாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

தமிழ்ச் சமுதாயம் விழிப்புணர்ச்சி பெறப் பாடுபடுகிறர்

துணைவேந்தர் சுந்தரவடிவேலு தூய பணி

மணிவிழாவில் முதலமைச்சர் கலைஞர் பாராட்டுரை

சென்னை, அக். 13—

"தமிழகத்தில் ஏற்கனவே மதிய உணவுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதென்ருலும், அதைத் தமிழ்நாட்டில் விரிவுபடுத்திப் பரவலாக்குவதற்கு முழு முதற் காரணம் சுந்தரவடிவேலு; அந்த வகையிலும் அவரை வாழ்த்துகிறேம்.

"அவர், தம் பதவிக் காலத்தில் பல அரிய காரியங்களைத் தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டியவராக இருக்கிறர்; ஒருவரை வாழ்த்துகின்ற நேரத்தில் -- பாராட்டுகின்ற நேரத்தில், 'ஏதோ அதனால் அவர் உயர்ந்துவிடுகிறர்' என்று இல்லை; அதனால் நமக்கும் கொஞ்சம் பலன் உண்டு; பாராட்டும் பாராட்டி உடம்பிற்குக்கூட நல்லது, சிலர் அதிலேகூட கஞ்சத்தனம் செய்கிறர்கள்; அது தேவையில்லை; உளமார -- மனமாரப் பாராட்டலாம்; எப்போதும் மனம் திறந்திருப்பது உடலுக்கும் நல்லது; மகிழ்ச்சியாக இருப்பது எப்படி நல்லதோ, அதைப்போலவே மனம் திறந்து பாராட்டுவதில் நன்மை இருக்கிறது; ஆகவே, சுயநலம் காரணமாகவும் பாராட்டவும் வேண்டும்.

"நாவலர் பேசுகையில், விதைக்கின்ற விதைதான் பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு எதிர்காலத்தில் ஒரு பெரிய சமுதாயத்தினை உருவாக்கக்கூடியதாக எழுந்து நிற்கும்' என்று குறிப்பிட்டார்; அந்தப் பணியை இன்று இந்தச் சமுதாயம் சுந்தரவடிவேலு போன்றவர்களிடம் ஒப்படைத்திருக்கிறது; அதை அவர்கள் செய்து முடிக்க வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர் சுந்தரவடிவேலு மணிவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது :—

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என்நோற்ருன் கொல் எனும் சொல்" எனவும், "தந்தைமகற் காற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" எனவும் வள்ளுவர் அன்றைக்கே பாடி வைத்தது எங்களையும் -- பெரியார் அவர்களையும் எண்ணித்தான் என்று கருதுகின்றேன்.

பெரியார் அவர்கள் என் எதிரே அமர்ந்திருக்கிற உங்களையும் காண்கிறர் -- அருகே அமர்ந்திருக்கின்ற எங்களையும் காண்கிறர்.

உழுது பயிரிட்டு நெல் மணிகள் குலுங்குகின்ற வயல்வெளியை அந்த வயலுக்குரிய உழவன் பார்த்து மகிழ்ச்சி அடைவதைப் போல நம்மையெல்லாம் பார்த்துப் பெரியார் அவர்கள் மகிழ்ச்சியடைந்துகொண்டிருக்கிறர்.

தானே தன் கையால் தைத்த சட்டையைத் தன் குழந்தைக்குப் போட்டு -- அதை முன்னும் பின்னும் அழகு பார்க்கின்ற தாயைப்போல் பெரியார் அவர்கள், நமக்கெல்லாம் சில பதவிகளைக் கொடுத்துவிட்டு அந்தப் பதவியின் அருமை பெருமைகளை அப்படியும் இப்படியுமாகப் புரட்டிப்பார்த்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறர்கள்.

தைக்கப்பட்ட சட்டையிலே எங்கேயாவது நூல் சரியாகத் தைக்கப்படாமல் போய்விட்டதா அல்லது பொத்தானுக்காக தைத்த நேரத்தில் ஊசி தங்கி -- பின் -- சட்டையை மாட்டிக்கொண்டிருக்கின்ற குழந்தையின் உடம்பில் குத்துகிறதா என்றெல்லாம் பார்க்கின்றதாயைப்போல பெரியார் அவர்கள், பதவியை அளித்துவிட்டு இந்தச் சங்கடத்தை இன்று ஏற்றுக்கொண்டிருக்கிறர் என்பதை நான் சொல்லாமல் இருக்கமுடியாது' ஆனல் அந்தச் சங்கடத்தில் அவர்களும் ஓர் மகிழ்ச்சி காண்கிறர்கள் -- நாங்களும் மகிழ்ச்சி காண்கிறேம்.

பெரியாருடைய வாழ்க்கை -- அவரால் வளர்க்கப்பட்ட அண்ணு -- அவரைத் தொடர்ந்த நாங்கள் அனைவருமே எங்களுடைய வாழ்க்கையில் புகழாரங்கள் எங்களை நோக்கி வருகின்ற நேரத்தில் அடைகின்ற மகிழ்ச்சியைவிட, எதிர்ப்பு வருகின்ற நேரத்தில் தான் அதிக உற்சாகம் பெறுவோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்; அப்போதுதான், ஏதோ நல்ல காரியம் செய்கிறேம் போல் இருக்கிறது; ஆகவே தான் சிலர் எதிர்க்கிறர்கள் : ஆகவே, இந்தக் காரியத்தைத் தொடர்ந்து செய்வோம்' என்ற எண்ணத்தை எங்களுக்கு அளித்துக்கொண்டிருக்கிறர்கள்.

நாட்டில் இருக்கின்ற எல்லோரும் பாராட்டிவிட்டால், 'ஓகோ -- நாம் தவறு செய்கிறேம்; ஆகவேதான், எல்லோரும் பாராட்டுகிறர்கள்' என்று நம் மனமே ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்திக்கொள்கிறேம்.

பெரியாருக்குக் கிடைக்கின்ற வாழ்த்துக்களில் -- அவரைப் போற்றுகின்ற நேரத்தில் அவர் அடைகின்ற மகிழ்ச்சியைவிட, அதிகமான மகிழ்ச்சியை எதிர்ப்பில்தான் காண்கிறர்; எடுத்துக்காட்டாக, பத்து நாட்களுக்கு அவரை சும்மா உட்காரவைத்து வீட்டில் மாலைகளை அணிவித்துக் கொண்டிருந்தால், அவருடைய உடம்பிற்கு ஏதாவது வரும்; எதிர்ப்பு ஏதாவது வருகிறதென்ருல், உடனடியாக அவரது நோய் பறந்துவிடும்; இதுதான் பெரியாருடைய வாழ்க்கைத் தத்துவம். அவருடைய உடல் நலம் எப்போதும் நன்ருக இருப்பதற்கான இரகசியத்தை நாங்கள் ஓரளவிற்குக் கற்றுக்கொண்டிருக்கிறேம்.

"பச்சிலை பெறுவதற்கு இங்கே கருணாநிதி வந்திருக்கிறர்' என்று வீரமணி சொன்னர்; 'ஒருவன் வந்தால் அதிக பச்சிலை கிடைக்குமா கிடைக்காதோ' என்று தான், நானும் -- நாவலரும் மற்ற அமைச்சர்களும் வந்திருக்கிறேம். பச்சிலை வேண்டுமென்று தெரிந்தால், 'நாமே கொண்டு போய் கொடுப்போம்' என்று அந்த அளவிற்கு அன்புள்ளம் கொண்ட தாய்தான் எங்கள் பெரியார்!

அப்படிப்பட்ட பெரியாரால் வளர்க்கப்பட்டு, அவருடைய வாழ்த்துக்கும் -- போற்றுதலுக்கும் -- பாராட்டுதலுக்கும் -- உற்சாகப்படுத்துகின்ற தன்மைக்கும் ஆளான நல்லவர்களில் -- வல்லவர்களில் ஒருவர்தான் இன்றைய பாராட்டுக்குரிய பல்கலைக் கழகத் துணைவேந்தர் சுந்தரவடிவேலு.

பேசியவர்கள் எல்லாம் அவரை மாத்திரம் வாழ்த்தினர்கள்; பக்கத்தில் இருந்த காந்தம் அம்மையாரை யாரும் வாழ்த்தியதாகத் தெரியவில்லை; சுந்தரவடிவேலு திருவாரூர் மாப்பிள்ளை; காந்தம் அம்மையார் திருவாரூரைச் சேர்ந்தவர்; ஆகவே, 'பெண் வீட்டுக்காரன்' என்ற முறையில் அவரை நான் வாழ்த்துகிறேன்.

உலகத்தில் பறவைகள் வாழ்கின்றன என்று சொல்கிறேம்; மிருகங்கள் வாழ்கின்றன என்று சொல்கிறேம்; ஆனல் மனிதன் வாழ்க்கையை நடத்துகின்றன் என்று சொல்கிறேம்.

பறவைகளும் -- மிருகங்களும் வாழ்க்கையை நடத்துவதில்லை; ஏனென்றல், அவைகளுக்காக வகுக்கப்பட்டிருக்கின்ற ஒரே கோட்டில் பறவைகளும் -- மிருகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன; ஆனல் மனிதன் தன் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறன்.

அவன் எப்படி வாழவேண்டுமென்று வரையறுத்திருந்தாலும், இப்படி இப்படி வாழ வழி வகுத்துக்கொண்டு -- பகுத்துக் கொண்டு -- தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு -- அதை நடத்திச் செல்கின்ற திறமையையும், பக்குவத்தையும் பெற்றிருக்கிறன்; அப்படி வாழ்க்கை நடத்துகின்ற நேரத்தில், நடத்தப்படுகின்றவிதம், அந்தந்த மனிதனுடைய மனப்பக்குவத்தைப் பொறுத்திருக்கலாம்.

ஆனல் வாழ்க்கை நடத்தும் போது, 'அது தனக்காக மாத்திரமல்லாமல் சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும்' என்று எண்ணவேண்டும்; அடிமட்டத்திலிருக்கின்ற மக்களும், தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மக்களும், பல்வேறு வகையால் ஏமாற்றப்பட்டுக் கிடக்கின்ற மக்களுக்கெல்லாம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்; தாழ்ந்துகிடக்கின்ற சமுதாயத்தில் அரசியல் எழுச்சி ஏற்படுத்தியும் -- அதற்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் பாடுபட்டு -- தொண்டாற்றிப் -- பணியாற்றுகின்ற பாங்கினைப்பெறுவதுதான் வாழ்க்கையை சிறப்புடையதாக்கும்.

அப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்துகின்ற நல்லவர்களில் ஒருவர்தான் சுந்தரவடிவேலு; அவருக்கு அறுபதாண்டு ஆகியும் இன்னும் இளமை முறுக்கோடு பணியாற்றுகிறர்; ஆகவே, 'இளமை என்பது தோற்றத்தில் இல்லை -- அது உள்ளத்தில்' இருக்கிறது' என்று தெரியவருகிறது.

தந்தை பெரியாரைப் பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், 'வயதில் -- அறிவில் முதியார்; நாட்டின் வாய்மைப் போருக்கு' என்றும் இளையர்' என்று பாடினர்.

அதைப்போல, சுந்தரவடிவேலு வயதில் முதியவராக இருந்தாலும் -- அறுபதைக் கடந்தவராக இருந்தாலும், உள்ளத்தால் இளையவராக இருக்கிறர்.

அரசியல் புரட்சிகளை நடத்தவும், தியாகங்களைச் செய்வதற்கும் நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற துறையின் மூலம் விறுவிறுப்போடு பணிகளை ஆற்றுவதற்கும் இளமை உள்ளம் தேவை; அதை சுந்தரவடிவேலு பெற்றிருக்கிறர்.''

'திறமையை நாட்டுக்குப் பயன்படுத்தியவர்'

'எதிர்கால தமிழகத்துக்கு அவர் விதையூன்றி வருபவர்'

நெ. து. சுந்தரவடிவேலு மணிவிழா -- நாவலர் வாழ்த்துரை

சென்னை, அக். 13—

"ஒருவருக்குத் திறமை இருக்கிறது என்பதற்காக அவரைப் பாராட்ட வேண்டும் என்பதில்லை; அந்தத் திறமையைப் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்துத்தான் பாராட்டும் அமையும்.

"ஒருவருடைய திறமை ஒரு சமுதாயத்தை வளர்க்கப் பயன்படும் -- இன்னொருவர் திறமை ஒரு சமுதாயத்தை அழிக்கப் பயன்படும்; ஒருவருடைய திறமையால் ஒரு நாடு பயனடையும் -- இன்னொருவரின் திறமையால் ஒரு நாடு துயரடையும்; இப்படி ஒவ்வொருவரின் திறமையும் அதைப் பயன்படுத்தும் வகையைப் பொறுத்தே புகழப்படும் -- அல்லது இகழப்படும்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு, அவர்களின் மணிவிழாவில் கலந்துகொண்டு வாழ்த்துக் கூறியபோது குறிப்பிட்டார்; அவர் மேலும் பேசியதாவது :—

"மகன்தான் தன்னுடைய தந்தைக்கு மணி விழா கொண்டாடுவான் -- என்பார்கள்; இங்கே மகனுக்குத் தந்தை மணி விழா கொண்டாடும் காட்சியைக் காண்கிறேம்.

நானும் -- சுந்தரவடிவேலுவும், தந்தை பெரியார் அவர்களின் பாசறையில் வளர்ந்தவர்கள்; அவரிடம் படாடோபத்தைக் காண முடியாது -- பண்பு நிறைந்திருக்கும்; ஆர்ப்பாட்டம் இருக்காது -- அடக்கம் மிகுந்திருக்கும்; உழைப்பின் அடிப்படையிலுக் உற்சாகத்தின் அடிப்படையிலும் மெல்ல மெல்ல வளர்ந்திருப்பவர் அவர்!

'வினைத் திட்பம் என்பது மனத் திட்பம்' என்ருர் திருவள்ளுவர்; குறிப்பிட்ட ஒரு கொள்கைக்குத் தன்னை ஒப்படைக்காமல் குறிப்பிட்ட வரம்பு முறைகளுக்கு -- சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படாமல் மாறுபட்டு நிற்கிறன் ஒருவன் என்ருல், 'அவன் உள்ளத்திலே திட்பம் இல்லை' என்று பொருள்.

அப்படி இல்லாமல், நல்லவைகளைச் சிந்தித்து--அந்தக் கட்டுப்பாட்டுக்குள் ஆடாமல் அசையாமல் இருந்து முன்னேறியவர்தான் சுந்தரவடிவேலு.

சில பேர் எதையாவது சிந்திக்கிருர்கள் -- ஆடுகிருர்கள்; அவர்களை எதில் சேர்ப்பது ?

'தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்' என்ருர் வள்ளுவர்; அதாவது சிலருக்குச் சுயபுத்தியும்

(4-ம் பக்கம் பார்க்க)

போனஸ் சட்டத்தில் உள்ள குறைபாடு

திருத்தம் செய்ய வேண்டுகோள்

சென்னை, அக். 13—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் தலைவர் காட்டூர் கோபால் எம்.எல்.சி. அறிவிப்பதாவது :—

"அண்மையில் போனசுப் பிரச்சினை குறித்து மத்திய அரசினர் வெளியிட்டுள்ள அவசரச் சட்டத்தில், '1971-ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட போனசுத் தொகையைவிட இந்த ஆண்டு அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டிய வகையிலான நிலைமை எழுகின்ற இடங்களில், கடந்த ஆண்டு பட்டுவாடா செய்யப்பட்ட தொகையைவிடக் கூடுதலாக உள்ள தொகை அனைத்தையும் பிராவிடண்டு பண்டு நிதிக் கணக்கில் சேர்த்துவிட வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது; இதனுல் பல்வேறு இடங்களில் புதுவகையான தொழிற் தகராறுகள் எழக்கூடும்.

உதாரணமாக, கடந்த ஆண்டும் -- இந்த ஆண்டிலும் ஒரே சதவிகிதப் போனசு உடன்பாடு எழுகின்ற இடங்களில்கூடச் சிக்கல் எழக்கூடும். 1970-ஆம் ஆண்டில் குறைந்த வேலை நாட்களில் வேலை பார்த்து 1971-ஆம் ஆண்டில் அதனைவிட அதிக வேலை நாட்களில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு, 1970-ஆம் ஆண்டினைவிட 1971-ஆம் ஆண்டில் சிறிதளவு சம்பள உயர்வு ஏற்பட்டிருந்து -- அந்த இடங்களில் இரண்டு ஆண்டுகளிலும் சமமான சதவிகித போனசு உடன்பாடு ஏற்பட்டால்கூட வித்தியாசத் தொகையை பிராவிடண்டு நிதியில் சேர்த்திட வேண்டிய வகையில் அவசரச் சட்டம் அமைந்துள்ளது.

மேலும் 20 சதவிகித போனசு உடன்பாடு ஏற்பட்ட ஓர் ஆலையில் 1970 ம் ஆண்டில் ஒரு தொழிலாளி உடல்நலக் குறைவின் காரணமாகவோ வேறு அசாதாரண காரணமாகவோ குறைந்த நட்கள் மட்டுமே வேலை செய்த நிலை இருந்து -- அதனல் மிகக் குறைந்த தொகை மட்டுமே அந்த ஆண்டு போனசாகப் பெற்றிருந்து -- 1971-ஆம் ஆண்டில் வழக்கமாக அவர் வேலைக்கு வந்திருந்து -- 1970-ஆம் ஆண்டிற்காகப் பெற்றிருந்த மிகக் குறைந்த போனசுத் தொகை போக மீதமுள்ள அனைத்துத் தொகையையும் பிராவிடண்டு நிதியில் சேர்ப்பிக்க வேண்டிய வகையில் அவசரச் சட்டம் அமைந்துள்ளது.

எனவே மத்திய அரசினர், இந்தப் போனசு அவசரச் சட்டத்தினுல் தொழிலாளிகள் பாதிக்கப்படாமல் உரிய மாறுதலைக் கொண்ட வகையில் திருத்த அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டியது மிக அவசர அவசியமானதாகும்; இந்த வகையில் திருத்த அவசரச் சட்டம் உடனே கொண்டு வரப்படாவிட்டால் பல்வேறு இடங்களில் இதன்தொடர்பாக தொழிற் தகராறுகளும் குழப்பங்களும் ஏற்படும்.

எனவே மத்திய அரசினர் உடனே தலையிட்டு ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

★

இரயில் பெட்டித் தொழிற்சாலை நிர்வாகத்தின் போக்கு

தொழிலாளர்களின் அதிருப்தி -- காட்டூர் கோபால் கண்டனம்

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் அறிவிப்பதாவது :—

இரயில் பெட்டித் தொழிற்சாலை நிர்வாகத்தினர், அந்தத் தொழிற்சாலையில் இயங்கிவருகின்ற உணவு விடுதியில் தொழிலாளர்கட்கு வழங்கப்பட்டு வருகின்ற உணவுப் பண்டங்களின் விலையைக் கடுமையான அளவில் கூடுதலாக்கியுள்ளனர்.

பொதுப்படையாகத் தொழிற்சாலைகளில் இயங்கிவருகின்ற உணவு விடுதிகளில், விலை நிர்ணயம் செய்வதற்குச் சில அடிப்படைகள் உள்ளன

அந்த உணவு விடுதிகள், இலாபமும் இன்றி -- இழப்பும் இன்றி சரிக்கட்டிக் கொள்கின்ற வகையில் இயங்கிவர வேண்டுமென்பது ஓர் அடிப்படை; அந்தத் தொழிற்சாலைகளின் உணவு விடுதிகளும் இலாப நோக்கத்தில் இயங்கியாக வேண்டும் என்கின்ற வகையில் நிர்வாகத்தினர் எண்ணுவார்களேயானல், அதைத் தொழிலாளர்கள் எப்போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தொழிலாளக்களுடைய நலன் கருதி மலிவான விலையில் நல்ல உணவுப் பண்டங்களை விநியோகம் செய்தாக வேண்டிய அவசியத்தை ஒட்டிப் பெரும்பாலான தொழிற்சாலைகளில் இந்த உணவு விடுதி நடத்துவதன் காரணமாக ஏற்படுகின்ற இழப்புக்குக்கூட, ஆண்டுதோறும் நிர்வாகத் தரப்பிலிருந்து மானியத் தொகை தரப்படுகின்ற ஏற்பாடுகட்கு பல உடன்பாடுகள் நடைமுறையில் இருந்துவருகின்றன.

ஆனல், இந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் திடீரென்று நிர்வாகத்தினர் இலாப நோக்குக் காரணமாக இதுவரை இருந்து வந்த விலைகளை உயர்த்தியிருப்பதானது தொழிலாளர்களைப் பெரும் அதிருப்திக்கு ஆளாக்கியது.

இவ்விதம் விலை உயர்த்தப்படும்போது இந்த உணவு விடுதிக்கென அமைந்துள்ள தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கியுள்ள குழுவினரைக் கூட்டி முடிவு செய்யாமலும் -- தொழிற் சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக்களைக்கூடக் கேட்காமலும் விலைகளை உயர்த்தியிருப்பதானது, மிகக் குறைந்தபட்ச நியாயத் தன்மையைக்கூட அந்த நிர்வாகத்தினர் எண்ணிப்பார்க்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது

நிர்வாகத்தினரின் தன்னிச்சையான போக்கினல் ஏறக்குறைய 13,000 தொழிலாளர்கள் பதட்ட நிலைக்கு ஆளாகி, எந்த வகையான உணவுப் பண்டங்கள் -- டீ கூட அருந்தாமல் வழக்கம்போல் கடுமையான உழைப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றனர்; நிர்வாகத்தினரது இந்த நியாய விரோத நடவடிக்கைகளை எதிர்த்துத் தொழிலாளர்கள் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்திற்கு விரைவான பரிகாரம் கிடைத்தாக வேண்டும்.

தொழிற்சாலை ஆய்வாளர் -- தொழில் ஆணையாளர்கள் -- தொழிற்சாலை நிர்வாகிகள் ஆகியோர் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு உடனடியாகத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் கலந்து பேசி, அந்த உணவு விடுதியில் நியாயமான விலை நிர்ணய ஏற்பாட்டிற்கு வழிகாண வேண்டியது அவசர அவசியமானதாகும்; அனைவரும் கலந்து பேசி விலை நிர்ணயம் ஏற்படுகின்ற வரையில், இதுவரை நடைமுறையில் இருந்துவருகின்ற விலைக்கே பண்டங்கள் வழங்கப்படுகிற ஏற்பாட்டிற்கு நிர்வாகம் இணங்கிவந்து, தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைக்கு செவி சாய்க்க வேண்டுமென்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்."

சேலம் மாவட்ட நூலக ஆணைக் குழு

தலைவராக ந. நடேசன் தேர்வு

சேலம் மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கும் புதிதாக 25 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கச் சேலம் மாவட்ட மத்திய நூலகத்தில் கூட்டம் நடந்தது.

கல்வி அதிகாரியும் மாவட்ட நூலக ஆணைக் குழு செயலாளருமான கு. முருகண்ணன் புதிய உறுப்பினர்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

பிறகு தலைவர் தேர்தல் நடந்தது; திரு. அங்கமுத்து தற்காலிகமாகத் தலைமை வகித்துத் தலைவர்தேர்தலை நடத்தி வைத்தார்.

திரு. நா. நடேசன் (தி.மு.க.), திரு. வ. மு. இராமசாமி (பழைய காங்கிரசு) ஆகியோர் போட்டியிட்டனர்; 20 ஓட்டுகள் பெற்று நா. நடேசன் வெற்றிபெற்ருர்; ப. மு. இராமசாமிக்கு 5 ஓட்டுக்களே கிடைத்தன.

திரு. நா. நடேசன் சேலம் மாவட்ட நூலக ஆணைக் குழு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு. பி.சண்முகசுந்தரம் வேலூர் கண்டர் கல்லூரி முதல்வர், வழக்கறிஞர் வணிவண்ணன், கே. பி. கணேசன், கே. நடேசன், என். இராமசாமி ஆகியோர் நூலக ஆணைக் குழுப் புதிய நிர்வாகிகளாகத் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

திரு. நா. நடேசன் அவர்களுக்கு சேலம் மாவட்ட தி.மு.க. செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., கே. ஜெயராமன் எம்.எல்.ஏ, சுகதேவ் ஆகியோர் ஆணைக்குழு தலைவரைப் பாராட்டி கைத்தறி ஆடைகள் அணிவித்தனர்.

சங்கனரி வட்ட தி.மு.க. அவைத் தலைவர், ஆர். வி. பெருமாள், இடைப்பாடி நகர தி.மு.க. செயலாளர் -- நடுவண் நூலக நூலகர் -- நூலக ஊழியர்கள் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன; நூலக ஆணைக்குழு உறுப்பினர்கள் ஊழியர்கள் தலைவரைப் பாராட்டி பேசினர்.

பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்து தலைவர் உரையாற்றினர்.

பிறகு சேலம் பஸ் நிலையம் அருகில் உள்ள அண்ணு சிலைக்கு தலைவர் மாலை அணிவித்து வணங்கினர்.

சங்ககிரி வட்ட தி.மு.க.

நா. நடேசனுக்குப் பாராட்டு

சங்ககிரி வட்ட தி.மு.க. சார்பில் 24—9—72-ல் சேலம் மாவட்ட தி.மு.க. பொருளாளர் நா. நடேசன் சேலம் மாவட்ட நூலக ஆணைக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காகப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

திரு. ஆர்.வி. பெருமாள் தலைமை வகித்தார்; வட்டப் பொருளாளர் ப. கந்தசாமி நா. நடேசன் அவர்களுக்குப் பட்டாடை போர்த்தினர்; இடைப்பாடி நகரச் செயலாளர் சேட்டு, டி. முத்து, மாயாஜோதி ப.கந்தன், பழனி, இராமன், சேகர், வெங்கடாசலம் ஆகியோர் கைத்தறி ஆடைகள் அணிவித்தனர்; மற்றும் தோழர்களும் நண்பர்களும் மலர் மாலைகள் அணிவித்தனர்.

வட்டக் கழகச் செயலாளர் மா. மண்டரிநாதன், சேட்டு டி. முத்து, ப. கந்தன், பகுடஞ்சாவடி கிள்ளி வளவன், சேகர், கச்சுப்பள்ளி ஊராட்சித் தலைவர் காதர் முகைதீன், முத்துசாமி, வெங்கடாசலம், கலியகவுண்டனூர் கந்தசாமி, எல்லபாளையம் இராமசாமி, எல். கே. இராமு, இடைப்பாடி சட்டமன்ற உறுப்பினர் அ. ஆறுமுகம் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்து நா. நடேசன் பேசினர்.



புத்தம் புதிய திட்டம்— அத்தனையும் உங்களுக்கே!

1972 அக்டோபர் முதல் அளிக்கப்படும் பரிசுகளில் பரபரப்பூட்டும் மாறுதல்கள்

மூன்று வரிசைகளுக்கு, மொத்தப் பரிசுகளும் பரிசுத் தொகையும் :

3 முதல் பரிசுகள்	ஒவ்வொன்றும்	ரூ. 1,00,000	=	ரூ	3,00,000
6 இரண்டாவது பரிசுகள்	ஒவ்வொன்றும்	ரூ. 10,000	=	ரூ.	60,000
225 மூன்ருவது பரிசுகள்	ஒவ்வொன்றும்	ரூ. 1,000	=	ரூ.	2,25,000
300 நான்காவது பரிசுகள்	ஒவ்வொன்றும்	ரூ. 500	=	ரூ.	1,50,000
1500 ஐந்தாவது பரிசுகள்	ஒவ்வொன்றும்	ரூ. 100	=	ரூ.	1,50,000
3000 ஆருவது பரிசுகள்	ஒவ்வொன்றும்	ரூ. 50	=	ரூ.	1,50,000

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு கீழ்க்கண்டபடி ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

முதல் பரிசுக்கு	ஒவ்வொன்றும்	ரூ. 1500/- வீதம் 6 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 9000/-
இரண்டாவது பரிசுகளுக்கு	ஒவ்வொன்றும்	ரூ. 500/- வீதம் 12 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 6000/-

மொத்தப் பரிசுகள்: 5052

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 10,50,000 *

குலுக்கல் நாள்: 10—11—1972

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

* 3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.



பாகிஸ்தான் போர்க் கைதிகள் முகாமில் பரபரப்பு

புதுடில்லி, அக். 14—

உத்தரப் பிரதேசத்தில் பாகிஸ்தான் போர்க் கைதிகள் முகாம் ஒன்றில் காவற்காரர்கள் தற்காப்புக்காகச் சுட்டதில் ஆறு போர்க் கைதிகள் மரணமடைந்தனர்.

காவற்காரர்களை மடக்கி அவர்களிடமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்குப் பாகிஸ்தான் போர்க் கைதிகள் குழு ஒன்று முயற்சி செய்தபோது காவற்காரர்கள் சுட்டனர்.

அந்தக் குழுவினர் ஒரு காவற்காரரிடமிருந்து துப்பாக்கியைப் பிடுங்கிவிட்டனர்; அவர்கள் அந்தக் காவற்காரரைச் சுட்டுக் காயப்படுத்தினர்.

இதற்கிடையே மற்றெரு கைதிகள் குழு, வாயிற்கதவு அருகில் இருந்த காவற்காரர்களை நோக்கி விரைந்து சென்று, மலர், பாதுகாப்புக் கோபுரத்தின்மீது ஏறத் தொடங்கினர்.

காவற்காரர்கள் தற்காப்புக்காகவும் -- நிலைமையைக் கட்டுப்படுத்தவும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; ஆறு போர்க் கைதிகள் மாண்டனர்; நிலைமை கட்டுக்கடங்கியது.

செங்கோட்டை

இ தொ.மு. சங்க ஆண்டு விழா

தா கிருட்டினன் கலந்து கொண்டார்

இரயில்வே தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் செங்கோட்டைக் கிளையின் முதல் ஆண்டு நிறைவு விழாவும் -- பேரறிஞர் அண்ணு பிறந்த நாள் விழாவும் 30—9—72-ல் மத்திய சங்க துணைத் தலைவர் நம்மாழ்வார் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மத்திய சங்கத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தா. கிருட்டினன் மாலை 3 மணி முதல் 6 மணி வரையில் தொழிலாளர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் தா. கிருட்டினன் அவர்களையும் -- ஏனைய மத்திய சங்க நிர்வாகிகளையும் புகைவண்டி நிலையத்திலிருந்து அண்ணு திடலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்; அங்கு சங்கத்தின் தலைவர் கொடியேற்றி வைத்தார்.

அடுத்து அண்ணு பிறந்த நாள் விழாவும், செங்கோட்டை கிளைச் சங்கத்தின் முதல் ஆண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டமும் நம்மாழ்வார் தலைமையில் நடைபெற்றது; கிளைச் செயலாளர் சோமசுந்தரம் அனைவரையும் வரவேற்ருர்; ஆபிரகாம் குருசாமி, நடராசன், குரும்பத்தேவர், சாமுவேல், நடேசன், ஞானப்பிரகாசம், சையதுமுகமது, மா. நடராசன், தென்காசி நிலவள வங்கித் தலைவர் திரவியம் ஆகியோர் பேசியபின் இறுதியில் தா. கிருட்டினன் எம்.பி. அவர்கள் நடைபெற்று முடிந்த ஓடும் தொழிலாளர்கள் போராட்டம் -- மூன்ருவது ஊதியக் குழு (போனசு) தொழிற் தகராறு சட்டம்--இரயில்வே நிர்வாகத்தின் எதேச்சதிகார போக்கு ஆகியவை பற்றிப் பேசினர்,

திரு. செல்லதுரை நன்றி நவின்ருர்.

பின்னர், நெல்லை கண்டசாலா—சாந்தி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இரயில்வே தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்

மானுமதுரை கிளை துவக்கம்

இரயில்வே தொழிலாளர் முன்னேற்றச் சங்க மானுமதுரைக் கிளையின் துவக்க விழா, மத்திய சங்கத் துணைத் தலைவர் வ. நம்மாழ்வார் தலைமையில் 3—10—72 அன்று மானுமதுரையில் நடைபெற்றது; அவ்வமயம் கீழ்க்கண்டவர்கள் கிளைச் சங்கத்தின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : ஜி. வி. எபனேசர்; செயலாளர் : ஆர். இராமசாமி; பொருளாளர் : பி. அரியசாமி; துணைச்செயலாளர்கள்: டி. இராமநாதன், வீராசாமி, ஏ. கார்மேகம்; மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

புதிய நிர்வாகிகளைப் பாராட்டி இராமசாமி, மதுரைக் கோட்ட செயலாளர் ஞானப்பிரகாசம், மத்திய சங்க இணைச் செயலாளர் மா. நடராசன் ஆகியோர் பேசினர்.

அடுத்து, கிளைச் சங்கத்தினை துவக்கிவைத்தும் -- கிளைச் சங்க பணி, தொழிலாளர் கடமை ஆகியவை பற்றி விளக்கி மத்திய சங்கத் தலைவர் தா. கிருட்டினன் எம்.பி. சிறப்புரையாற்றினர்.

எருமணந்தாங்கல் கலைஞர் கருணாநிதி மன்றம்

விழுப்புரம் வட்டம் எருமணந்தாங்கல் கலைஞர் கருணாநிதி மன்ற நிர்வாகிகள் தேர்தல் 22-9-72-ல் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : கே. ஜெயராமன் எம்.சி.; துணைத் தலைவர் : பி. சம்பந்தம்; செயலாளர் : வி. இராமசாமி; துணைச் செயலாளர் : எம். சரவணன்; பொருளாளர் : வி. கிருஷ்ணசாமி; துணைப் பொருளாளர் : வி. துரைக்கண்ணு, வட்டப் பிரதிநிதி : என். கிருஷ்ணன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 15 பேர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டு அனைவரும் ஒன்றுபட்டு உதவி செய்யுங்கள்' என்றும் எம்.ஜி.ஆர். அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்; பெரியார் விடுத்த அந்த வேண்டுகோளும் பயனற்றுப் போய் விட்டது!

இன்று காலையில் (அக். 13) திரு. கி. மனோகரன் அவர்களும் -- திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களும், கழகத் தலைவரையும் -- கழகப் பொதுச்செயலாளரையும் சந்தித்து, 'இனியும் சமரசத்துக்கு வழி இருக்கிறது' என்று கூறினர்; 'நாங்கள் சமரசக் கதவை மூடிவிடவில்லை; நீங்கள் சமரசத்துக்கு முயற்சி செய்யுங்கள்' என்று தலைவரும் -- பொதுச்செயலாளர் அவர்களும், அவர்களிடம் தெரிவித்தார்கள்.

பிற்பகல் திரு. மனோகரன் அவர்கள், திரு. முரசொலி மாறன் அவர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, 'உடனடியாக வந்தால் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு நல்ல முடிவுக்கு வருவார்' என்று அழைத்திருக்கிறார்; அதற்கேற்ப முரசொலி மாறன் சென்று எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்திருக்கிறார்; எம். ஜி. ஆர். அவர்களிடம், திரு. மாறன், 'இது தனிப்பட்ட இருவருடைய பிரச்சினை அல்ல -- கட்சியின் இருதயமான செயற்குழு, பொதுக்குழு ஆகிய அமைப்புகளுக்குக் கட்டுப்பட வேண்டிய பிரச்சினை; இதில் நம்முடைய தனிப்பட்ட கௌரவங்களைவிடக் கட்சியின் கௌரவம் பெரிது; ஆகவே, தாங்கள் நடந்து விட்டவைகளுக்கு வருத்தம் தெரிவித்துவிட்டுக் கழகத்தின் கட்டுப்பாட்டுக்கு மதிப்பு அளித்து நல்ல முறையில் தொடர்ந்து செயல்பட வேண்டும்' என்ற கருத்துப்பட வேண்டிக் கொண்டிருக்கிறார்; அந்த முயற்சியிலும் பலன் ஏற்படவில்லை; இது, 'கழகத்தை அலட்சியமாக மதிக்கிறார் எம். ஜி. ஆர்.' என்பதையே காட்டுகிறது!"

பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டங்கள்

அக். 22-ல் நாடெங்கும் நடைபெறும்

சென்னை, அக். 14

பொதுக்குழுத் தீர்மானங்கள் பற்றிய விளக்கக் கூட்டங்களை இத்திங்கள் 22-ம் நாள் ஞாயிறன்று 200 ஊர்களில் நடத்துவது என்று தி. மு. க. தலைமைச் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

நாளை 15-ந் தேதி சென்னையில் பொதுக்குழுத் தீர்மான விளக்கக் கூட்டம் நடைபெறும்; இது, கடற்கரைச் சீரணி மேடையில் நடைபெறும்.

அக். 22-ந் தேதி கூட்டங்கள் நடைபெறும் இடங்களின் பெயர்களும் – கலந்துகொள்ளும் தலைவர்களின் பெயர்களும் வருமாறு —

காஞ்சிபுரம்	...	கழகத் தலைவர் கலைஞர்
கோவை	...	பொதுச்செயலாளர் நாவலர்
மதுரை	...	பேராசிரியர் க. அன்பழகன் மதுரை மேயர் எஸ். முத்து
கடலூர்	...	அமைச்சர் என். வி. நடராசன்
வேலூர்	...	அமைச்சர் சத்தியவாணிமுத்து
தஞ்சை	...	அமைச்சர் மு. உ. சண்முகம் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ.
நீலகிரி	...	அமைச்சர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா
விருத்தாசலம்	...	அமைச்சர் சி. பா. ஆதித்தனார்
திருச்சி	...	அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் மா. முத்துசாமி எம்.பி.
இராமநாதபுரம்	...	அமைச்சர் மன்னை நாராயணசாமி
உடுமலைப்பேட்டை	...	அமைச்சர் ஓ. பி. இராமன்
சேலம்	...	அமைச்சர் எஸ். இராமச்சந்திரன்
ஈரோடு	...	அமைச்சர் மு. கண்ணப்பன்
நாகர்கோவில்	...	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
நெல்லை	...	டி. கே. சீனிவாசன் எம்.பி.
தர்மபுரி	...	முரசொலி மாறன் எம்.பி.
மாயூரம்	...	தில்லை வில்லாளன் எம்.பி.

மற்ற ஊர்களைப் பொதுக்குழுவிற்கு வருகை தரும் வட்டச் செயலாளர்களைக் கலந்துகொண்டு -- மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழகத்திற்கு அறிவிப்பார்கள்; அந்த ஊர்களில் கலந்து கொள்வோர் யார் யார் என்று தலைமைக் கழகம் பிறகு அறிவிக்கும்.

நாளை பொதுக்குழுக் கூட்டத்தில்...

சட்ட மன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்பர்

சென்னை, அக். 14—

பொதுக்குழு உறுப்பினர்கள் மட்டுமின்றி, சட்டப் பேரவை -- மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற இரு அவை உறுப்பினர்களும் கலந்து கொள்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

செயற்குழுவில் வெளிநாட்டுப் பிரச்னை -- பொருளாதாரப் பிரச்சினை -- விலைவாசிப்பிரச்சினை, நெசவாளர் பிரச்சினை -- விவசாயிகள் பிரச்சினை -- தொழிலாளர் பிரச்சினை -- வறட்சி நிலைபோன்ற பல தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு அவைகள் பொதுக்குழுவின் முடிவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

17--10--72

குடந்தை

அண்ணா -- பெரியார் பிறந்த நாள் விழாக் குழு சார்பில் மாலை 6 மணிக்கு மோதிலால் தெருவில்; தலைவர் : பி. வி. செயராமன் எம்.சி.; பேசுவோர் : செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., கோ. சி. மணி எம்.எல்.சி., எஸ். ஆர். இராதா எம்.சி., க. மௌலானா ஷா, கு. இராசமாணிக்கம் எம்.எல்.ஏ., சு. பத்மநாபன். டி. மாரிமுத்து மற்றும் பலர்.

மின் விளக்கேற்று விழா

குமிழியம் ஊராட்சி மின் விளக்கு ஏற்று விழா, 17—10—72 மாலை 5 மணிக்கு திரு. வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெறும்; தந்தை பெரியார் அவர்கள் மின் விளக்கை ஏற்றி வைப்பார்கள்; டாக்டர் கோதண்டராமன், எம்.எஸ். வெங்கடாசலம், கு. இரத்தினவேலு, கு. கோவிந்தராசுலு மற்றும் பலர் பேசுவர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்காது -- சொல் புத்தியும் ஏறாது; கேட்பதுமில்லை; அவர்களால் துன்பம்தான்!

காலரா போன்ற நோய்களால் எப்படிப்பட்ட கொடுமை விளையுமோ அப்படிப்பட்ட கொடுமை ஏற்படும்; இவர்களால் தீங்குகள்தான் வளரும்.

சுந்தரவடிவேலு அந்த வகை மனிதரல்லர்; அதனாலேதான இன்று இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறார்!

கல்வித் துறையின் மூலம்தான் ஒரு நாட்டில் சீர்திருத்தம் காண முடியும்; கற்க வேண்டியவை என்ன என்ன -- சொல்லித் தர வேண்டியவை என்ன என்ன -- என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

எந்தத் தமிழகத்தைக் காண விரும்புகிறோமோ அதற்கான விதையை, ஊன்றத்தக்க நிலத்தில் -- ஊன்றத்தக்க விதத்தில் ஊன்றினால்தான் ஒளிமயமான தமிழகத்தை எதிர்காலத்தில் நாம் காண முடியும்; இதையெல்லாம் உணர்ந்து பணியாற்றி வருபவர் சுந்தரவடிவேலு.

சில பேர், ஆண்டுக்கே வாழ்வை ஊட்டுவார்கள்; சில பேர் வாழ்வுக்கு ஆண்டைக் கூட்டுவார்கள்; இதில் முதல் ரகத்தைச் சேர்ந்தவரான சுந்தரவடிவேலு, பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்."

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்
அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக
வெளியீடு : நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.

'எதிரிகளுக்கு இடம் கொடுத்து விடாதீர்'

மாநில தி. மா. மு. க. தீர்மானம்

சென்னை, அக். 14—

சென்னை மாவட்ட தி. மா. மு. க. கூட்டம், நேற்று மாநில தி. மா. மு. க. அமைப்பாளர் எல். கணேசன் தலைமையில் நடைபெற்றது; நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரி மாணவப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :—

1. இப்போது கழகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்குத் தலைமைக் கழகம் எந்த வகையான பரிகாரம் காண்கிறதோ அதனை ஏற்றுக் கொண்டு, கழகத்திற்கு வலிமை சேர்க்கின்ற வகையில் பணியாற்றுவதென்று தீர்மானிக்கிறோம்.

2. நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டு எதிரிகள் கழகத்திற்கு உண்டாக்க நினைக்கின்ற அழிவுச் செயல்களுக்குக் கழக மாணவர்கள் பலியாகிவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

3. உணர்ச்சிவயப்பட்டுக் கழகத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும், அமைதியையும் நிதானப் போக்கையும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்வதுடன், அம்மாதிரிப் பொறுப்பற்று ஈடுபடுபவர்களின்மீது நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

4. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் மீண்டும் தமது நிலையைப் பரிசீலித்து -- கழகம் தருகின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒற்றுமைக்கும், வலிமைக்கும் ஊறு ஏற்படாத வாறு முடிவிற்கு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்."

சமுதாயத்தைச் சீரழிக்கும் இலஞ்ச ஊழல்

தலைமையமைச்சர் இந்திரா காந்தி கவலை

புதுடில்லி, அக் 12—

"இலஞ்ச ஊழலை வேருடன் களைவதற்குத் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; ஏனெனில், நமது நாட்டு மக்களுக்காக நாம் உருவாக்கி வரும் எதிர்கால அஸ்திவாரத்தில் ஊழல் நடவடிக்கைகள் விரிசலை ஏற்படுத்திவிடலாம்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

மத்திய புலன் விசாரணை நிறுவனம் (சி.பி.ஐ.) -- மாநில இலஞ்சத் தடுப்பு அதிகாரிகள் கூட்டு மாநாட்டில் உரையாற்றுகையில அவர் மேலும் கூறியதாவது :—

"இலஞ்ச ஊழல் நாடு முழுவதையும் பாதித்துவிட்டது; எதிர்காலச் சந்ததிகளையும் இது பாதிக்கும்.

'இலஞ்ச ஊழலைப் பற்றி அடிக்கடி பேசுவது நாட்டுக்குப் பெரும் அளவுக்குத் தீங்கை விளைவித்திருக்கிறது; 'ஒவ்வொருவரும் இலஞ்ச ஊழலில் ஈடுபடுகின்றனர்' என்ற எண்ணத்தை இது ஏற்படுத்தி விடுகிறது' நாட்டின் எதிர்காலத்துக்கு இந்நிலைமை சூழ்நிலை ஏற்றதல்ல!

வாயு மண்டலத்தைத் தூய்மையாக்கி – சிறந்த சுகாதார சூழ்நிலையைத் தோற்றுவிப்பது எவ்வளவு முக்கியமானதோ அதே போன்று இலஞ்ச ஊழலுக்கு முடிவு கட்டுவதும் முக்கியமாகும்; தற்போதுள்ள வருந்தத்தக்க நிலவரத்துக்கு முடிவு கட்டுவதில் மக்களுக்கு நிலைமையை எடுத்துக் கூறி – அவர்களது ஒத்துழைப்பைப் பெறுவது மிகவும் முக்கியமானதாகும்.

இலஞ்ச ஊழல் சமூகத்தை மட்டும் கெடுக்கவில்லை – தனி நபரையும் கெடுக்கிறது; தனிநபர் கெட்டுப் போவது அதிக அளவு அபாயமானதாகும்; ஏனெனில், ஊழல் உள்ள நபரால் நாட்டுக்குப் பயனில்லை.

'கதவுகள் இன்னும் மூடப்படவில்லை'

'கட்சியைக் காக்கும் கடமை இருக்கிறது'-- செய்தியாளர் கேள்விகளுக்குக் கலைஞர் -- பேராசிரியர் பதில்கள்

சென்னை, அக். 14—

'திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் விவகாரத்தைப் பொறுத்து சமரச முயற்சிகட்குக் கதவுகள் மூடப்படவில்லை"

என்று நேற்று மாலை தலைமைச் செயற்குழுக் கூட்டம் முடிந்ததும் செய்தியாளரிடம் பேசுகையில் கழகத் தலைவர் கலைஞர் கூறினர்.

இதன் தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- கலைஞர் அளித்த பதில்களும் வருமாறு :—

கேள்வி:—"சமரசம் ஏற்படுமா?"

பதில் :— "கதவுகள் மூடப்படவில்லை."

கேள்வி :—"அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார், தம்மை மிரட்டிக் கையெழுத்து வாங்கியதாகத் தெரிவித்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறதே......"

பதில் :— "சத்தியவாணிமுத்து அம்மையார் என்னிடமும், பொதுச்செயலாளரிடமும், 'அந்தச் செய்தி தவறானது -- நான் மறுப்புத் தெரிவிக்கப் போகிறேன்' என்று தெரிவித்திருக்கிறார்."

கேள்வி :—"எம்.ஜி.ஆர். அவர்களை மீண்டும் சந்திப்பீர்களா ?"

பதில் :—"வருத்தம் தெரிவித்து விடுவாரானால், முன்புபோல சந்திப்போம்; செயற்குழு இட்ட கட்டளையைத்தான நிறைவேற்ற முடியும்."

கேள்வி :—"மாற்றுக் கட்சியின் தூண்டுதல் ஏதாவது இருக்கு மென்று கருதுகிறீர்களா ?"

பதில் :—"அதுபற்றி நான் ஏதும் சொல்வதற்கில்லை; ஆனால்; மாற்றுக் கட்சிகள், இந்தப் பிரச்சினை வளர வேண்டுமென விரும்புகின்றன."

கேள்வி :—"அமைச்சர் அன்பழகன், ப. உ. சண்முகம் ஆகியோர், 'எங்களுக்குச் சில கடமைகள் இருக்கின்றன' என்று சொன்னதாக எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருக்கிறாரே......"

அமைச்சர் அன்பழகன் (குறுக்கிட்டு) :—"ஆமாம்; கட்சியைக் காப்பாற்ற வேண்டிய கடமை இருக்கிறது."